# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,
(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)
சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590


**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA9887/F/2023**

திரு. K. நாராயணன் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வானூர் (இ), திருச்சிற்றம்பலம்,
கூட்டுரோடு, விழுப்புரம் மாவட்டம் 605 111. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **13.03.2023** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **21.04.2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **31.05.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.K.நாராயணன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.அ.பாஸ்கரன், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், வானூர் (இ), திருச்சிற்றம்பலம், கூட்டுரோடு, விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 13.03.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 02.10.2022 தேதியில் சிறுவை ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் கொடுக்கப்பட்ட 7 கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மனு, 01.11.2022 தேதியில்

சிறுவை ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் கொடுக்கப்பட்ட 7 கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை தகவல்களாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 06.04.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 21.04.2023 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 31.05.2023 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 06.04.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் சிறுவை ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் கொடுக்கப்பட்ட 7 கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவல்களை கோரியுள்ளதாகவும், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் தனது கோரிக்கை மனுக்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுநாள் வரையில் எடுக்கவில்லை எனவும் தான் கேட்ட தகவலை வழங்க மறுக்கும் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர் மீது சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் நடவடிக்கை எடுத்து, தன்னுடைய கோரிக்கை மனுக்கள் தொடர்பான நடவடிக்கைகளை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA9887/F/2023</u>**

**பெறுநர்**
பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வானூர் (இ), திருச்சிற்றம்பலம்,
கூட்டுரோடு, விழுப்புரம் மாவட்டம் 605 111.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**
திரு. K.நாராயணன், த/பெ. கேசவ கவுண்டர்
மாரியம்மன் கோயில் தெரு
எடையப்பட்டு, வானூர் தாலுக்கா
விழுப்புரம் மாவட்டம் - 605 652

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025